திரு. இ. எஸ். தியாகராசன் : இந்தக் கல்லூரிக்காக கோவிலில் இருந்து 5 லட்சம் தருவதாகச் சொன்னார்களே, அந்தத் தொகை வந்து விட்டதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதில் ஒரு பகுதி வந்திருக்கிறது. இன்னொரு பகுதி வரவேண்டியதாக இருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரி அமைக்க ஒரு குழு அமைக்கப்பட்டு, அது பொதுமக்களிடத்திலே 25 ஆயிரம் ரூபாய்க்கு வசூல் செய்யப்பட்ட அந்தப் பணத்தை அறங்காவலர்களிடத்தில் ஒப்படைத்து விட்டார்களா ? எங்கே அந்தப் பணம் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரியில் இந்த ஆண்டாவது பட்டப் படிப்பு தொடங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பட்டப் படிப்புக்கு போதுமான கட்டிட வசதிகள் வேண்டும். கட்டடம் கட்டுவதற்கான நிலத்தையும், ஐந்து லட்சம் ரூபாயும் கொடுக்க அந்தக் குழுவினர் ஒப்புக் கொண்டுள்ளார்கள். நிலத்தை ஒப்படைத்தால் கட்டடம் கட்டப்பட்டு மேற்கொண்டு, பட்டப் படிப்புக்காக பல்கலைக் கழகம் அனுமதி அளிக்க வேண்டும். தற்காலிகமான இடமாக இருந்தாலும், இடத்தின் வசதியைக் காண்பித்தால் பல்கலைக் கழகம் அனுமதி அளிக்கும்.

Medical centres in rural areas

* 221 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to assist Doctors in opening Medical Centres in rural areas on co-operative basis; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. மக்களுக்குத் தேவையான வகையில் சுகாதார வசதிகள் செய்யப்படவில்லை. ஆகவே, கூட்டுறவு அடிப்படையில் கிராமங்களில் மருந்தகம் திறந்தால், ஓமியோபதி டாக்டர் படித்தவர்கள் மக்களுக்கு உதவி செய்ய முடியும். ஆகவே, கூட்டுறவு முறையில் மருந்தகம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தத் துணைக் கேள்வியில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் என்று குறிப்பிட்டார்கள். நமது மாநிலத்தில் உள்ள மொத்த 374 ஊராட்சி ஒன்றியங்களில் 367 ஒன்றியங்களில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கிறது. மற்றவைகளில் இரண்டு இருக்கின்றன. இரண்டு என்பதே ஏதாவது

1971 டிசம்பர் 10]

விதிவிலக்காக ஏற்பட்ட ஒன்றாகும். இரண்டாவதாக கூட்டுறவு முறையில் மருந்தகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டார்கள். கூட்டுறவு முறையில் மருந்தகம் நடத்த முன்வருகிற டாக்டர்கள் கூட்டுறவுத் துறையில் அதற்கான விண்ணப்பம் செய்தால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கக் கூடும். நான்கைந்து டாக்டர்கள் சேர்ந்து நடத்துவதுதான் கூட்டுறவு என்பதாகும். ஒருவரே தனியாக இருந்து நடத்துவது கோவாபரேடிவ் பேஸிஸ் என்று சொல்ல முடியாது. மக்களுக்காக கூட்டுறவு முறையில் நடத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்யும். பொதுமக்களே சேர்ந்து நாங்கள் எங்களுக்காக ஒரு கூட்டுறவு மருந்தகம் கூட்டுறவு முறையில் நடத்துகிறோம் என்று சொல்வார்களேயானால் அதற்கு நிச்சயமாக ஆவன செய்து, அரசாங்கம் ஒத்துழைக்கும்.

சென்னை நகருக்குப் பக்கத்தில் "வாலன்ட்ரி ஹெல்த் சர்வீஸ்" திட்டத்தின்படி ஒரு மருந்தகம் இயங்குகிறது. இது கூட்டுறவு முறையில் இல்லையென்று சொன்னாலும், அந்த அளவிற்கு ஆங்காங்கே கிராமப் பகுதிகளிலுள்ள மக்கள் கூட்டுறவு இயக்கமாக, கூட்டுறவு முறையில் உறுப்பினராகச் சேர்த்து ஓர் அமைப்பாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆங்காங்கே சிறு மருத்துவமனைகளை ஏற்படுத்தி, குறிப்பிட்ட டாக்டர் சில குடும்பங்களுக்கு பொறுப்பு ஏற்றுக் கொள்கிற முறையை நடத்தி வருகிறார்கள். இந்த வாலன்ட்ரி ஹெல்த் சர்வீஸை ஆங்காங்கே கிராமப் பகுதிகளில் ஏற்படுத்த, அங்குள்ள பொதுமக்களின் ஒத்துழைப்பை நமது சட்டசபை உறுப்பினர்கள் பெற்றுக் கொடுத்தால் பொதுமக்களுக்கு உதவி செய்தவர்களாவார்கள்.

பயிற்சி மருத்துவர்கள் வேலை நிறுத்தம்

*** 222 வினா.—திரு. இ. எஸ். தியாகராசன்**
திரு. கே. எ. வகாப் } **மாண்புமிகு மக்கள்**
டாக்டர் எச். வி. ஹாண்டே

நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்க மருத்துவ மனைகளிலுள்ள அவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தம் 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், எந்த காரணத்துக்காக வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) மாதத்திற்கு ரூபாய் 250 உதவிப்பணத்துடன் ஏற்படுத்திய பயிற்சி மருத்துவ உதவியாளர்கள் (Assistantship Training) பதவியை எடுத்துவிட வேண்டுமென கோரி வேலை நிறுத்தம் செய்தனர்.

திரு. இ. எஸ். தியாகராசன்: இன்னும் எத்தனை ஹவுஸ் சர்ஜன்கள் வேலையின்றி இருக்கிறார்கள் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஹவுஸ் சர்ஜன் பயிற்சி முடிந்தவுடன் அவர்களுக்கு எவ்வளவு விரைவில் வேலை கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் வேலை கொடுக்கலாம் என்பதுதான் இன்றைக்கு